**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 57/2023**

**வாதி தரப்பு சாட்சி-1 கலிங்கன் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>:**

1) நான் ஆத்தாம்பட்டியில் வசிக்கிறேன். இவ்வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது அண்ணன் பெரியசாமி, இளமுருகன், ரெட்டியார் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் விபரங்களை நான் சொல்லித்தான் வழக்குரை தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். பிரதிவாதிகளின் பதிலுரை விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனது பாட்டா பெயர் என்னவென்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் நான் படிக்காததால் எனக்கு தெரியாது. எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், 4 அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை பெயர் பாலமுத்து முத்துராஜா. எனது தகப்பனார் எந்த மாதம், எந்த தேதியில் இறந்தார் என்றால் ஞாபகமில்லை. எனது தாயார் பெயர் பழனியம்மாள்.

2) அவர் எப்போது இறந்தார் என்று ஞாபகமில்லை. தாவா சொத்திற்கான ஆவணங்கள் எனது தகப்பனார் பாலமுத்து முத்துராஜா பெயரில் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. எனது சகோதரர் பெரியசாமி, இளமுருகன், ரெட்டியார் பெயரில் எத்தனை வருடமாக வழக்கு நடத்துகிறேன் என்றால், கடந்த 30 வருடங்களாக நடத்தி வருகிறேன். மேற்படி நபர்களுக்கு எதிராக எத்தனை வழக்குகள் தாக்கல் செய்தேன் என்றால், 4 வழக்குகள் தாக்கல் செய்தேன். இதே தாவா சொத்து சம்பந்தமாக குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறதா என்றால் தெரியாது. மேற்படி நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்து, நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருக்கிறேன் என்றால் சரிதான்.

3) குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. குளித்தலை

சார்பு நீதிமன்ற வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜரான பின்னிட்டுதான், இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் தாவா சொத்து மற்றும் குளித்தலை சார்பு நீதிமன்றத்தின் தாவா சொத்து ஒரே சொத்தாக இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் குளித்தலை சார்பு நீதிமன்ற வழக்கை பற்றி சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் இவ்வழக்கில் முழுமையான சங்கதிகளை சொல்லாத காரணத்தினால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**